**ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி ச. வளர்மதி, இ.ஆ.ப.,**

**ந.க.எண். 3219/2023/ஆ** நாள் : .06.2024

**பொருள் :** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – வேலூர் மண்டலம் – ராணிப்பேட்டை மாவட்டம் – தக்கோலம் பேரூராட்சி – அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த கனகசபை (திரு) பூ– என்பவர் 01.03.2019 அன்று பணியிடையில் காலஞ்சென்றது – வாரிசுதாரர் விக்னேஷ் (திரு) க என்பவருக்கு கருணை அடிப்படையில் வரித்தண்டலர் பணியிடம் வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக

**பார்வை :**

1. ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3219/2023/ஆ நாள் 06.12.2023
2. சென்னை பேரூராட்சிகள் இணை இயக்குநர் (பொது) அவர்களின் கடிதம் ந.க.எண். 3202/2024/அ6 நாள் 07.06.2024 உடன் இணைத்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை அரசு கடிதம் (efile) எண். 3480/ பேரூ1 /2024–1 நாள் 28.05.2024
3. அரசாணை (நிலை) எண். 33 தொழிலாளர் நகன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ 1) துறை நாள் 08.03.2023

--------

**ஆணை :**

ராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.பூ.கனகசபை என்பவர் 01.03.2019ம் தேதியன்று பணியிடையில் காலமாகிவிட்டார். அன்னாரது வாரிசுதாரரும் மகனுமான திரு.க.விக்னேஷ் என்பவருக்கு ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 1030/2020/ஆ நாள் 22.07.2020 ன்படி கருணை அடிப்படையில் ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் பேரூராட்சியில் (தற்போது நகராட்சி) வரித்தண்டலராக பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, 25.07.2020–ம் தேதி முற்பகல் முதல் பணியில் இணைந்து தற்போது தக்கோலம் பேரூராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி தனியரின் பணியினை வரன்முறை செய்யக்கோரி பார்வை 1–ல் காணும் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்துடன் அரசிற்கு கருத்துரு அனுப்பிவைப்பட்டது. மேற்காணும் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு , அரசாணை (நிலை) எண். 33 தொழிலாளர் நகன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ 1) துறை நாள் 08.03.2023ன்படி தனியரின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு மற்றம் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைபடாத நிலையில், தக்கோலம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 01.03.2019ல் பணியிடைக்காலமான திரு.பூ.கனகசபை என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.க.விக்னேஷ் என்பவர் கருணை அடிப்படையில் சோளிங்கர் பேரூராட்சியில் (தற்போது நகராட்சி) வரித்தண்டலராக பணியில் சேர்ந்த நாளான 25.07.2020 முற்பகல் முதல் தனியரது

பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிட நியமன அதிகாரியை அறிவுறுத்தமாறு பார்வை 2–ல் காணும் சென்னை பேரூராட்சிகள் இணை இயக்குநர் (பொது) அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண். 33 தொழிலாளர் நகன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ 1) துறை நாள் 08.03.2023ன்படி ராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.க.விக்னேஷ் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் / பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுதிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.க.விக்னேஷ் வரித்தண்டலர் | தக்கோலம் பேரூராட்சி | 25.07.2020 மு.ப. | 25.07.2020 மு.ப. |

மேலும், தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டினை நகலினை அனுப்பிடவும் தக்கோலம் பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியர்
ராணிப்பேட்டை

பெறுநர்,
திரு.க.விக்னேஷ்
வரித்தண்டலர்
தக்கோலம் பேரூராட்சி
(செயல் அலுவலர் வாயிலாக)

நகல் : 1. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் தகவலுக்கு
2. செயல் அலுவலர் , தக்கோலம் பேரூராட்சி